திரு. சி. பொன்னுசாமி : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த ஆலோசனைக் குழுவில் அன்னிய நாடு சென்று வந்த நிபுணர்கள் இருக்கிறார்களா என்று தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : இதிலே பல அங்கத்தினர்களின் பெயர்கள் இருக்கின்றன. அன்னிய நாடு சென்று வந்தவர்களா இல்லையா என்ற தகவல் என்னிடம் இல்லை.

தொதுவர்களுக்கு கூட்டுறவு சங்கம்

* 286 கேள்வி.—திரு. டி. கார்ச்சா கவுடர் : கனம் விவசாய அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நீலகிரி ஜில்லாவிலுள்ள தொதுவர்கள் (Todas) தங்களுக்கு ஒரு கூட்டுறவு சங்கம் தேவை என்று அரசாங்கத்திற்கு மனு செய்துள்ளனரா ?

(இ) ஆம் என்றால், அதன் மீது என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டது ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) இல்லை. ஆனால் உதகை தாலுகாவிலுள்ள தொதுவர்களுக்காகக் கூட்டுறவு கடன் சங்கம் ஒன்றை அமைக்க ரூ. 15,500 வரை நிதி உதவி அளிக்கலாமெனக் கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் யோசனை கூறியிருந்தார்.

(இ) இந்த யோசனை தற்போதைக்கு தள்ளிவைக்கப் பட்டுள்ளது.

(a) No, Sir. But the Registrar of Co-operative Societies submitted proposals for the grant of financial assistance to the extent of Rs. 15,500 for the organisation of a Co-operative Credit Society for the Todas in Ooty taluk.

(b) The proposals were deferred for the present.

திரு. டி. கார்ச்சா கவுடர் : ஸார், நீலகிரி ஜில்லாவிலுள்ள இந்த தொதுவர்கள், ஆதி வாசிகள், ஜில்லாவுக்கே முதல் முதலாக வந்தவர்கள். இவர்கள் விவசாயிகள். இவர்களுக்கு 500 ஏக்கர்களுக்கு மேல் பூமி இருக்கின்றது. விவசாயமும் செய்கிறார்கள். தற்போது அவர்களுக்கு கூட்டுறவு சங்கம் அமைப்பதில் எமர்ஜென்சி என்று சொல்லித் தள்ளிப் போடாமல், உடனடியாக அரசாங்கம் ஏதாவது வழிவகை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : இது தேச நெருக்கடி காரணமாகத் தான் ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னேன். இருந்தாலும் கனம் அங்கத்தினர் கேட்டுக்கொள்வதால் இது பற்றிப் பரிசீலனை செய்யப்படும்.

Cause-way (Cheyyar river)

* 287 *Q.*—Sri C. KOTHANDARAMA BAGAVATHAR : Will the Hon. the Minister for Works be pleased to state whether there is any proposal to construct a cause-way across the Cheyyar river near Thachur on Arni-Devikapuram road in North Arcot district during the Third Five-Year Plan?

கனம் திரு. வெ. ராமையா : இல்லை.